நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 05.02.2024.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2024ம் வருடம் பிப்ரவரி மாதம் 08ம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>08.02.2024</td><td>416</td><td><u>பொருள் எண். 01</u><br>தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தம்) 2022 தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் 13.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 80ல் நகர்மன்றங்கள் கல்வி வரி விதிக்க பிரிவு 91ல் கண்டவாறான சொத்துவரி ஆண்டு மதிப்பில் ஐந்து சதவீதத்திற்கு மிகாமல் வரிவிதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் மீது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தீர்மானம் நிறைவேற்றி அரசினருக்கு அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 326581/2023/ஆர், நாள். 27.12.2023ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட விதிகளின்படி சொத்துவரி ஆண்டு மதிப்பில் 5% கல்வி வரி விதிப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>08.02.2024</td><td>417</td><td><u>பொருள் எண். 02</u><br>களக்காடு நகராட்சி பகுதிகளில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய தேதிகளில் பெய்த பெருமழையின் காரணமாக இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட சாலை பாதிப்புகள், மற்றும் குடிநீர் திட்ட பாதிப்புகளை சீர் செய்ய கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th></tr><tr><td>1.</td><td>நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பெருமழையினால் சாலைகளில் ஏற்பட்ட உடைப்புகள் மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொளும் பணி.</td><td>7.40</td></tr></table></td><td>சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு செலவினம் செய்ய அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2.</td><td>இந்நகராட்சி குடிநீர் திட்டமான வடகரை சம்பில் உள்ள பம்பு செட் மற்றும் மின் பழுதடைந்த மின்சாதனங்கள், பைப்புகள் ஆகியவற்றை சீரமைக்கும் பணி.</td><td>15.82</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட மதிப்பீட்டு செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.02.2024</td>
<td>418</td>
<td>
<u>பொருள் எண். 03</u><br>
களக்காடு நகராட்சி பகுதிகளில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய தேதிகளில் பெய்த பெருமழையின் காரணமாக இந்நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட சாலை பாதிப்புகள் மற்றும் குடிநீர் திட்ட பாதிப்புகளை உடனடியாக தற்காலிகமாக சீர்செய்ய வேண்டியிருந்ததால் ரூ.7.40 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளை நகர்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 2022 (திருத்தம்) பிரிவு 57 (7)ன் கீழ் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையாளரால் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.மேற்கண்ட மதிப்பீட்டு செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
</td>
<td>சட்ட விதிமுறையினை பின்பற்றி செலவிட அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
<tr>
<td>08.02.2024</td>
<td>419</td>
<td>
<u>பொருள் எண். 04</u><br>
களக்காடு நகராட்சி குடிநீர் திட்டம், அடிபம்புகள் பராமரிப்பு, சிறுமின் விசை பம்புகள் பராமரிப்பு, பவர் பம்பு பராமரிப்பு, குளோரிநேசன் ஆகியவற்றுக்கு ஆண்டு பராமரிப்பு செய்ய (2024–2025ம் நிதியாண்டுக்கு) கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் பதிக்கப்பட்டுள்ள பிரதான குழாய், மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் கசிவுகளை சீர் செய்யும் பணி.</td><td>4.60</td></tr>
<tr><td>2.</td><td>இந்நகராட்சி அனைத்து வார்டுகளிலும் உள்ள சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்யும் பணி</td><td>3.20</td></tr>
<tr><td>3.</td><td>இந்நகராட்சி வடகரை சம்ப்பில் உள்ள பவர் பம்பு மற்றும் சிதம்பராபுரத்தில் உள்ள பவர் பம்புகளில் எற்படும் பழுதுகளை சீர் செய்யும் பணி.</td><td>1.68</td></tr>
</table>
</td>
<td>சட்ட விதிமுறைகளை பின்பற்றி செயல்பட அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>4.</td><td>இந்நகராட்சி அனைத்து வார்டுகளிலும் உள்ள அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்யும் பணி.</td><td>2.00</td></tr>
<tr><td>5.</td><td>இந்நகராட்சி குடிநீர் திட்டங்களில் பயன்படுத்த தேவையான குளோரின் சப்ளை செய்யும் பணி.</td><td>2.00</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட மதிப்பீட்டு செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.02.2024</td>
<td>420</td>
<td>
<u>பொருள் எண். 05</u><br>
களக்காடு நகராட்சிக்குட்பட்ட கீழப்பத்தை பகுதியில் (சர்வே எண்.1118(7)ல் புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டும் பணிக்காக 100.00 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற அறிவிப்புகள் திட்டம் 2022–2023ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 29.12.2023 அன்று பெறப்பட்ட கீழ்கண்டவாறான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல் குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சிக்குட்பட்ட கீழப் பத்தையில் (சர்வே எண். 1118(7) சமுதாய நலக்கூடம் கட்டும் பணி.</td><td>திரு. ஜே. ஜஸ்டின் பிரதீப்</td><td rowspan="2">100.00</td><td>0.01% குறைவு</td></tr>
<tr><td>திரு. டி. பிரம்மநாயகம்</td><td>0.46% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
பெறப்பட்ட மேற்கண்டவாறான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.ஜே. ஜஸ்டின் பிரதீப் என்பவருக்கு பணி ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>08.02.2024</td>
<td>421</td>
<td>
<u>பொருள் எண். 06</u><br>
களக்காடு நகராட்சிக்குட்பட்ட கீழப்பத்தை பகுதியில் சமுதாய நலக்கூடம் கட்டும் பணி, சிங்கம்பத்து பகுதியில் சந்தை அமைக்கும் பணி, பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் வணிக வளாகம் கட்டும் பணி ஆகியவற்றுக்கு பணி முன்னேற்பாடாக மண் பரிசோனை செய்து திட்ட அறிக்கை தயாரித்து பிரேரனை சமர்ப்பிக்க வேண்டியிருந்ததால் மேற்படி மண் பரிசோதனை செய்ய அரசினர் தொழில்நுட்ப கல்லுரரி, பாளையங்கோட்டையில் இருந்து பணியாளர்கள் மற்றும் உபகரணங்களை கொண்டுவரும் போக்குவரத்து, உணவு மற்றும் தங்குமிடம் ஆகிய செலவினத்தை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட தொழில்
</td>
<td>சட்ட விதிமுறைகளை பின்பற்றி செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>நுட்ப கல்லுரரி முதல்வர் அவர்களின் விலைப்பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டவாறான மூன்று இடங்களில் மண் பரிசோதனை செய்த வகைக்கு ரூ. 75000/–செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம். திட்ட நிதி கிடைக்கப்பெற்றவுடன் ஈடு செய்ய அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>08.02.2024</td><td>422</td><td><u>பொருள் எண். 07</u><br>திருநெல்வேலி மற்றும் களக்காடு சுற்றியுள்ள பகுதிகளில் பெய்த அதிக கன மழை காரணமாக களக்காடு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு மற்றும் மழைக்கால நோய்கள் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க வேண்டியது அவசியமாகிறது. அதன்படி களக்காடு நகராட்சியில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்பு மற்றும் பொதுமக்களிடையே மழைக்கால நோய்கள் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க வீடுகளுக்குள் புகை பரப்பும் இயந்திரம் அதற்கு பயன்படுத்தக்கூடிய சிறிய கேஸ் சிலிண்டர்கள், வீடுகளுக்கு வெளியே புகைப்பரப்பும் இயந்திரம், கருப்பு மற்றும் வெள்ளை பினாயில் போன்றவற்றை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை 5.00 லட்சம் ஆகும். போர்கால அடிப்படையில் மேற்கண்ட பொருட்களை அவசர அவசியம் கருதி உடனடியாக செக்ஷன் 57ல் வாங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.</td><td>தீர்மானம் நிராகரிக்கப் பட்டது. செலவினத் தொகை அதிகமாக இருப்பதனால் அடுத்த தீர்மானத்தில் முறையான (சரியான) தொகையுடன் வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.</td></tr>
<tr><td>08.02.2024</td><td>423</td><td><u>பொருள் எண். 08</u><br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட அண்ணா சிலை அருகில் பயணிகள் நிழற்குடை கட்டும் பணிக்காக 20.00 லட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–2024ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 10.01.2024 அன்று பெறப்பட்ட கீழ்கண்டவாறான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல் குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி அண்ணாசிலை அருகில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணி.</td><td>திரு.வி. முருகையா பாண்டியன்</td><td rowspan="2">20.00</td><td>0.03% குறைவு</td></tr>
<tr><td>திருமதி. என்.எம். புஷ்பம்</td><td>1.11% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>08.02.2024</td>
<td>424</td>
<td>
<u>பொருள் எண். 09</u><br>
களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 26 மற்றும் வார்டு எண்.07 ஆகியவற்றில் 15 வது நிதிக்குழு மான்ய திட்டம் 2023–2024ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 10.01.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல் குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண்.26 கோவில்பத்து செட்டியார் தெரு, வார்டு எண்.07, கீழக் கருவேலன்குளம் பள்ளிகூடத் தெரு ஆகியவற்றில் சிறுபாலம் அமைக்கும் பணி.</td><td>திரு. திருமலை நம்பி.</td><td rowspan="2">5.30</td><td>0.29% குறைவு</td></tr>
<tr><td>வி. வேலுச்சாமி</td><td>1.00% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>08.02.2024</td>
<td>425</td>
<td>
<u>பொருள் எண். 10</u><br>
களக்காடு நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2.0 (2022–2023)ன் கீழ் கழிவு நீர் தொட்டி வாகனம் ஒன்று கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 15.11.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல் குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>துரய்மை இந்தியா திட்டம் 2.0 (2022–23) ன் கீழ் 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட கழிவு நீர் தொட்டி வாகனம் (Cess pool Tanker)</td><td>ABT Industries limited, Madurai</td><td>43.25</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
மதிப்பீட்டு விலைக்கு சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>சட்ட விதிமுறைப்படி செயல்பட அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>08.02.2024</td>
<td>426</td>
<td>

<u>பொருள் எண். 11</u>

களக்காடு நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளை பராமரிப்பு செய்ய மாநில நிதிக்குழு பள்ளிகள் பாராமரிப்பு மான்யம் (இயக்குதலும் பேணுதலுக்கான 2023–2024 பகுதி II) திட்டத்தின் கீழ் பள்ளிகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு 19.01.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல் குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">நகராட்சி நடுநிலைப்பள்ளி, ராஜாஜிபுரம் பராமரிப்பு பணிகள்.</td><td>திருமதி. என்.எம். புஷ்பம்</td><td rowspan="2">20.00</td><td>0.11% குறைவு</td></tr>
<tr><td>திரு. வி. முருகையா பாண்டியன்</td><td>1.44% அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>08.02.2024</td>
<td>427</td>
<td>

<u>பொருள் எண். 12</u>

களக்காடு நகராட்சி புதிய பேரூந்து நிலையத்தினை மேம்படுத்த மூலதன நிதி மற்றும் இயக்குதலும் பேணுதலுக்குமான மான்ய நிதி 2023–2024 பகுதி II ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 19.01.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல் குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பேரூந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள், வியாசராஜபுரம்.</td><td>திரு. ஜே. ஜஸ்டின் பிரதீப்,</td><td rowspan="2">176.00</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திரு. பிரம்ம நாயகம்.</td><td>0.53% அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>08.02.2024</td>
<td>428</td>
<td>

<u>பொருள் எண். 13</u>

களக்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட நாங்குநேரி வட்டம் ஏர்வாடி குறுவட்டம் சீவலப்பேரி கிராம புல எண் 890/7 ல் குடியிருந்து வரும் நபருக்கு நத்தம் இடத்தில் பட்டா வழங்க தடையின்மை சான்று கோரி ஏர்வாடி குறுவட்ட வருவாய் ஆய்வாளர் 16.10.2023 ல் கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி இடம் நாங்குநேரி வட்டம் ஏர்வாடி குறுவட்டம் சீவலப்பேரி கிராம புல எண் 890/7 ல் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக ஆட்சேபணையற்ற புறம்போக்கு
</td>
<td>சட்ட விதிமுறைப்படி செயல்பட ஒப்புதல் அளிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | இடத்தில் நத்தம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் மனையினை வரன்முறைபடுத்தி இலவச பட்டா வழங்க வரப்பெற்ற அரசாணை எண் 318 மற்றும் 408 வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 30.08.2019ன்படி, கிராம நத்தம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் திரு லட்சுமணன் த/பெ அண்ணாமலை என்பவரது குடியிருப்பிற்கு பட்டா வழங்க கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்களின் 04.10.23 ல் பரிந்துரை செய்துள்ளார். மேலும் மேற்படி இடம் கிரைய ஆவண எண் 917/1982 ல் பத்திரம் பதிவு செய்து இந்நகராட்சி வரி விதிப்பு எண் 171/021/900097 ல் வீட்டு வரி செலுத்தப்பட்டு வருகிறது எனவே ஆட்சேபணையற்ற நத்தம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் மனையினை வரன்முறைபடுத்தி இலவச பட்டா வழங்க நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என மன்றம் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>அரசாணை எண் 318 மற்றும் 408 வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 30.08.2019 ன் படியும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்களின் 04.10.23 ல் பரிந்துரை அடிப்படையில் பட்டா வழங்க நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.1198/2023/எப்1). | |
| 08.02.2024 | 429 | **<u>பொருள் எண். 14</u>**<br>களக்காடு நகராட்சியில் 2008-2009ம் ஆண்டில் வார்டு எண். 26 கோவில்பத்து தெருவில் நகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட சமுதாய நலக்கூடத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு 2008-2009ம் நிதியாண்டில் நிகழ்ச்சி ஒன்றுக்கு ஒரு நாள் வாடகையாக ரூ.1000/- மற்றும் மின் கட்டணமாக ரூ.300/- ஆக மொத்தம் ரூ.1300 மட்டுமே வாடகையாக பயனாளிகளிடமிருந்து பெறப்பட்டு வரப்படுகிறது. மேலும் திடக்கழிவு சேவை வரி வசூல் செய்யப்படாமலும் கடந்த 15 ஆண்டுகளாக வாடகை மறு நிர்ணயம் செய்யப்படாமலும் உள்ளது. எனவே நகராட்சி நிதி நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் 01.04.2024 முதல் மேற்கண்ட சமுதாய நலக்கூடத்திற்கு நிகழ்ச்சி ஒன்றுக்கு ஒரு நாள் வாடகையாக ரூ.2300/-மின் கட்டணம் ரூ.500/- திடக்கழிவு சேவை வரி ரூ. 200/- மற்றும் முன் வைப்புத் தொகையாக ரூ. 3000/-ஆக வசூல் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | சட்ட விதிமுறை களின்படி, செயல்பட அனுமதி அளிக்கப் படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 08.02.2024 | 430 | **பொருள் எண். 15**<br>களக்காடு நகராட்சி அலுவலகத்தில் 2023ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் டிசம்பர் முடிய ஐந்து மாதங்கள் தினமணி நாளிதழ் விநியோகம் செய்த வகைக்கு செலவினத் தொகை ரூ.1363/-ஐ திரு. பேச்சியப்பன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 08.02.2024 | 431 | **பொருள் எண். 16**<br>1. Resolved that the Kalakad Municipality is authorised to borrow a loan amount of **Rs. 247.00 Lakhs** for ” Conversion of existing street lights into energy efficient LED lights (1644 Nos)” from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed by G.O.(Ms)No.36, MA&WS (MA2) Dept., Dated. 10.03.2023.<br>2. Resolved that the Kalakad Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Kalakad Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Kalakad Municipality.<br>3. Resolved that the Kalakad Municipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed / to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO. This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.<br>4. Resolved that the Commissioner be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of principal, interest and other monies due for the loan availed for this project proposal to TUFIDCO.<br>5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Kalakad Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project. | அனுமதிக்கப் பட்டது. (சட்ட விதிமுறைகளின்படி செயல்பட) |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>6.</td><td>The Kalakad Municipality shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect the timely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis.</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.02.2024</td>
<td>432</td>
<td>
<u>பொருள் எண். 17</u><br>
களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாண்டு பெய்த பெருமழையின் காரணமாக இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் திட்டங்களில் ஏற்பட்ட மின்சாதனங்கள் பழுது மற்றும் மின் மோட்டார்கள் பழுது ஆகியவற்றினை சீர்செய்ய 29.01.2024 ஆம் நாளன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஒப்பந்ததாரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல் குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வடகரை சம்ப் பகுதியில் பழுதடைந்த மின் சாதனங்கள் மாற்றியமைத்தல் பணி.</td><td>Vignesh Hydro Electro Mech, Madurai.</td><td rowspan="2">15.82</td><td>0.53% குறைவு</td></tr>
<tr><td>Rowkal & Co, Madurai.</td><td>2.52% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது. (அரசு விதிகளின்படி செயல்பட)</td>
</tr>
<tr>
<td>08.02.2024</td>
<td>433</td>
<td>
<u>பொருள் எண். 18</u><br>
களக்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் 20 எண்ணம் DBC பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் களக்காடு நகர் முழுவதும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை தீவிரப்படுத்தும் பொருட்டு பிப்ரவரி 2024 மற்றும் மார்ச் 2024 ஆகிய இரண்டு மாதங்களுக்கு கூடுதலாக 20 DBC பணியாளர்களை டெங்கு கொசு ஒழிப்பு பணியில் பணியமர்த்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 08.02.2024 | 434 | **<u>பொருள் எண். 19</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் மழைநீர் வடிகால் ஓடையை சுத்தம் செய்வதற்கும், சிதம்பராபுரம், கீழப்பத்தை நுண் உர மையக்குடிலில் இயற்கை உரம் தயாரிப்பதற்கும், தூய்மை பணிகளை மேற்கொள்வதற்கு போதிய தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், நவம்பர் 2023 முதல் ஒரு வருட காலத்திற்கு சுய உதவிக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ள கூடுதலாக 20 நபர்களை நியமிக்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 08.02.2024 | 435 | **<u>பொருள் எண். 20</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 27, கோவில்பத்து தேவர் தெரு, அயன் நத்தம் சர்வே எண். 257/1A, புதிய சர்வே எண். 935/1, அயன் நஞ்சை குடியிருப்பு சர்வே எண். 272/1ல் கிழமேல் 11 அடி, தென்வடல் 86.5 அடி உள்ள தெருமனை மற்றும் இதே சர்வே எண்ணில் கிழமேல் 151 அடி, தென்வடல் 11 அடி உள்ள தெருமனையும் சேர்த்து அப்பகுதி பொதுமக்களால் நன்கொடையாக இந்நகராட்சிக்கு ஆவண எண். 1252/2011ல் எழுதி கொடுத்துள்ளனர். மேற்கண்ட தெருமனைகளில் பேவர் பிளாக் சாலைகள் அமைத்து கொடுக்க அப்பகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனு வரப்பெற்றுள்ளது. இதனை மன்றம் பரிசீலிக்கலாம்.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். பேவர் பிளாக் சாலைகள் அமைக்க அனுமதிக்கலாம். | சட்ட விதிமுறைக ளை பின்பற்றி செயல்பட மன்றம் அனுமதிக்கின் றது. |
| 08.02.2024 | 436 | **<u>பொருள் எண். 21</u>**<br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடைகள் மற்றும் வணிக வளாக கடைகளுக்கு கடை வாடகை செலுத்தாத கடை உரிமைதாரர்களின் வைப்புத் தொகையை காலம் கடந்த வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதிகளை பின்பற்றி செயல்பட அனுமதிக்கப் படுகிறது. |
| 08.02.2024 | 437 | **<u>பொருள் எண். 22</u>**<br>களக்காடு நகராட்சியில் 2024-2025 ஆம் ஆண்டுக்கு ஒப்பந்தக்காரராக புதிதாக பதிவு செய்ய திரு. பொ. ராஜன், த/பெ. பொன்னுசாமி, 23, உதயமார்த்தாண்டன் தெரு மற்றும் திரு. வேல்துரை & CO 66A/5, திருவனந்தபுரம் சாலை, புதிய பேருந்து நிலையம் அருகில், திருநெல்வேலி - 627 005 ஆகியோர் இந்நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்து தர கேட்டு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :**<br>2024-2025 ஆம் நிதியாண்டில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. (விதிமுறைகளி ன்படி செயல்பட) |